**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.76/2015**

**PW18**

| | | |
|---|---|---|
| **Name** | : | சேகர் |
| **Father's Name** | : | வெங்கடேசன் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | வேலூர் |
| **Caste** | : | -------- |
| **Calling** | : | |
| **Religion** | : | --------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2026.

Accused present.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி கண்காணிப்பாளராக பணிபுரிந்து 2016 ல் பணிஓய்வு பெற்றேன். தற்போது வேலூரில் குடியிருந்து வருகிறேன். 15.05.2014 அன்று நான் மேல் செங்கம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அந்நிலைய குற்ற எண். 142/2013 சட்டப்பிரிவுகள் 294(b),324,506 (2) @ 302 இதப்படி பதிவு செய்திருந்த வழக்கை அப்போதைய காவல் ஆய்வாளர் ராஜகோபால் புலன் விசாரணை செய்த வழக்கை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் ஏற்கனவே ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக எதுவும் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திரு. அசோக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . இவ்வழக்கில் பிரேத பரிசோதனை பரிசோதனை செய்த மரு. கிருஷ்ணகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் என்புலன் விசாரணையை முடித்து குற்ற வழக்கு தொடர்பு துறை அலுவலர் அவர்களிடம் கருத்துரை பெற்று எதிரி மீது 294(b), 302 இதச பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறுதி அறிக்கையை நான் 15.07.2014 அன்று தாக்கல் செய்தேன். பிரிவுமாற்றல் அறிக்கை யை நான் தாக்கல் செய்யவில்லை. எனது இறுதி அறிக்கையுடன் பிரிவு மாற்றல் அறிக்கை சேர்க்கப்பட வில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் பிரிவு மாற்ற அறிக்கை பார்வையிட்டேன். வழக்கு 02.09.2013 அன்று பிரிவு மாற்றல் செய்யப்பட்டுள்ளது. 26.09.2013 தேதியிட்ட உயிரியல் அறிக்கையில் செங்கலின் எண்ணிக்கை மற்றும் அளவு பேனாவால் சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தான செங்கலை நான் பார்வையிடுவதற்கு முன்பு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனக்கு முன்னால் விசாரணை செய்த ஆய்வாளர் கோயில் ஏலம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏலம் சம்மந்தமாக நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கி எனக்கு முன்பாக விசாரணை செய்த ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன சக்திவேல் எந்த மருத்துவமனையில் எதற்காக சேர்க்கப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தீர்த்தமலை மருத்துவமனையில் வலி அதிகமாக இருப்பதாக சேர்ந்துள்ளார். மருத்துவர் கிருஷ்ணகுமாரை நான் விசாரிக்கவில்லை. நான் அசோக்குமாரை மட்டும்தான் விசாரித்தேன். கைப்பற்றப்பட்ட செங்கலிலோ அல்லது வேட்டியிலோ ரத்தக்கரை இருந்ததாக இல்லை என்றால் சரிதான். இறந்துபோன சக்திவேல் என்பவருக்கு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யும்போது அதனால் ஏற்பட்ட காயத்தால்தான் அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் சக்திவேலின் இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரியாக விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.